# கொவிட்-19 கிருமித்தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரின் நெருங்கிய தொடர்பாக **நீங்கள் இருந்தால்** என்ன செய்யவேண்டும்



1. **குறுஞ்செய்திவழி உங்களுக்குச் சுகாதார அபாய எச்சரிக்கை அனுப்பப்படும்**



2. **உங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டு முதல் நாள் அன்று ஏண்டிஜன் விரைவுப் (ART)^ பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்**

   **go.gov.sg/agsubmit** என்ற இணையப்பக்கத்தில் பரிசோதனை முடிவுகளைப் பதிவேற்றம் செய்யுங்கள்




3. **அடுத்த 6 நாட்களுக்கு வெளியில் செல்லும் முன்னர், நீங்களே உங்களைப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள்**
   - கிருமித்தொற்று இல்லையென்று உறுதியானால் மட்டுமே வெளியில் செல்லுங்கள்

4. **கிருமித்தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், Swab and Send Home (SASH) மருந்தகத்திற்குச் (phpc.gov.sg) செல்லுங்கள்; கீழ்காண்பவைப் பொருந்தினால் மட்டுமே:**
   - உங்களுக்கு உடல் நலமில்லை (எ.கா. காய்ச்சல், இருமல், தொண்டைப்புண்) அல்லது
   - நீங்கள் முற்றிலும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத 60 வயதிற்கும் மேற்பட்டவர்

   நீங்கள் அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்கள் மருத்துவர் அறிவுறுத்துவார்

5. **பரிசோதனை முடிவுகள், கிருமித்தொற்று இல்லையென காட்டினால், ART கண்காணிப்பு ஏழாம் நாள் அன்று முடிவுறும்**
   - உங்களுக்குக் கிருமித்தொற்று உறுதிப்படுத்தப்பட்டு, நீங்கள் நலமாக இருந்தால், உங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டு 72 மணிநேரத்திற்குப் பின் மீண்டும் ART பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்
   - பரிசோதனை முடிவுகள், கிருமித்தொற்று இல்லையென காட்டினால், தனிமைப்படுத்துதலை முடித்துக்கொள்ளுங்கள்



^ ART பரிசோதனைக் கருவிகள் தானியக்க இயந்திரங்களிலிருந்து கிடைக்கப்பெறும். **gowhere.gov.sg/art**

மேல் விவரங்கள்:
**covid.gov.sg**

gov.sg